COPY OF DEPOSITION

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.

அசல் வழக்கு எண்.83/2012

பி.வா.சா. 1: விஜயன் நாள்: 11.12.2023

2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.அ.செல்வகுமார், பி.இ., பி.எல்., என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு -

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அருணாசலத்திற்கு ஆறுமுகமுதலியார் மற்றும் சின்னப்பமுதலியார் இரண்டு சகோதரர்கள் என்றால் சரிதான். ஆறுமுகமுதலியாருக்கு 3 ஆண்மக்களும், 3 பெண் மக்களும் உண்டு என்றால் சரிதான். அந்த 3 பெண்மக்களில் நல்லம்மாள் என்பவர் ஒருவர் என்றால் சரிதான். அந்த நல்லம்மாளின் மகள் தான் வழக்கின் வாதி ராஜலட்சுமி என்றால் சரிதான். 3 ஆண்மக்கள் மற்றும் 2 பெண்மக்கள் ஆகியோரின் வாரிசுகள் இவ்வழக்கில் 1 முதல் 4, 6 முதல் 13 மற்றும் 22,23, 24 பிரதிவாதிகள் என்றால் சரிதான். சின்னப்பமுதலியாருக்கு 2 ஆண்மக்களும், 1 மகளும் என்றால் சரிதான். அவருடைய வாரிசுகள் 5ம் பிரதிவாதி மற்றும் 14 முதல் 21 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். அருணாசலத்திற்கு பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாளுடன் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவர் மனைவி தான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் ஏற்பட்டதாக காணப்படுகின்றன என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் தான் இந்த வழக்கில் உள்ள தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாளுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். அவர் எப்போது இறந்தார் என்பதற்கு என்னிடம் எந்த விபரமும் இல்லை என்றால் சரிதான். அவர் இறந்து போனது உறுதி என்றால் சரிதான். மாரியம்மாள் (எ) முத்தம்மாள் என்பவர் அருணாசலத்தின் இரண்டாவது மனைவி என்றால் சரிதான். பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் கிரயம் பெற்ற சொத்துக்களில் மாரியம்மாள் (எ) முத்தம்மாளுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மாள் (எ) முத்தம்மாள் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3ன்படி வழக்கு சொத்துக்களை அனுபவித்து வந்தார்



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-2.pdf

என்பதற்கு என்னிடம் வேறு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்றால் அவர் தான் தண்ணீர் சரி, சொத்து வரி ஆகியவற்றை செலுத்தி வந்தார், அங்கு குடியிருந்து வந்தார். அதற்கான ஆதாரம் எதுவும் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எவ்வாறு தாக்கல் செய்வது என்றே எனக்கு தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 சொத்து வரி இரசீதுகள் மாரியம்மாள் (எ) முத்தம்மாள் பெயரில் இல்லை என்றால் சரிதான். மாரியம்மாள் (எ) முத்தம்மாள் தாவா சொத்தில் குடியிருக்கவும், இல்லை, அனுபவிக்கவும் இல்லை, அவர் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அருணாசலம் எழுதி வைத்ததாக சொல்லும் உயிலானது அமுலுக்கு வந்ததாக காட்டுவதற்கு என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரசீதுகள் தான் நான் தாக்கல் செய்துள்ளேன். என்ன இரசீது என்றால் வீட்டுவரி இரசீது தான் நான் தாக்கல் செய்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.7 ஆவணம் பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் அவர் பெயரில் தான் உள்ளது. உயில் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்பதால் தான் நடைமுறைக்கு வந்ததற்கு ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி மாரியம்மாள் (எ) முத்தம்மாள் அருணாசலம் இறந்த பின்னர் உயில் மூலமான வாரிசு என்ற வகையில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வாழ்நாள் அனுபவ உரிமைப்படி தாவா சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்று சொன்னால் அது தவறு. பி.வா.சா.ஆ.3 ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மாள் (எ) முத்தம்மாள் உயிலின் அடிப்படையில் தனக்கு தாவா சொத்தை அனுபவிக்கும் உரிமை இருப்பதாக குறிப்பிட்டு வருவாய்துறை ஆவணங்களிலும், சொத்துவரி தொடர்பான ஆவணங்களிலும் தன் பெயரை பதிவு செய்து கொள்ள நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அருணாசலம் இறந்த பின்னிட்டு பி.வா.சா.ஆ.3 ஆவணமான உயில் எங்கு இருந்தது என்று எங்களுடைய எதிர்வழக்குரையில் ஏன் குறிப்பிடவில்லை என்றால் என் பாட்டியிடம் தான் இருந்தது, பதிலில் குறிப்பிடவில்லை, (சாட்சி ஏன் குறிப்பிடவில்லை என்ற கேள்விக்கு பதில் அளிக்கவில்லை). அந்த உயில் மோசடியானது என்பதால் தான் அவசியமான விபரத்தை நாங்கள் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மாள் (எ) முத்தம்மாள் அவர் உயிரோடு இந்த காலத்தில் மேற்படி உயிலானது உண்மையானது என்று நிரூபிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. 22.09.1966 ம் தேதியில் அருணாசலமுதலியார் இறந்த பின்னிட்டு



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-2.pdf

உயிலை மெய்ப்பிக்க நீதிமன்றம் மூலம் எந்த நடவடிக்கையும் எடுக்காததற்கு அது மோசடியான உயில் என்பது தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள உயில் சாசனமானது செல்லாதது என்பதால் அதன் மூலம் இந்த வழக்கில் பங்குரிமை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. உரிய காலத்தில் மேற்படி உயில் சாசனத்தை வெளியே கொண்டு வராததற்கான காரணத்தை என்னுடைய எதிர்வழக்குரையிலோ, சாட்சியத்திலோ கூறவில்லை என்று சொன்னால் அதை யாரிடமும் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அது பெயரளவிலானது, செல்லதக்கதல்ல என்பதால் தான் அதை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருந்தாலும் ஏற்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 உயில் ஆவணம் அருணாசலத்தின் விருப்பத்தின்பேரில் ஏற்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த உயிலில் இருக்கக்கூடிய கையெழுத்துகளும், கைரேகைகளும் அவருடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com